**+2 வணிகவியல் முழு ஆண்டுத்தேர்வு மார்ச் 2020**

1.(இ) பீட்டர் F டிரக்கர்
2.(இ) 1992
3.(இ) மும்பை
4.(ஆ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் R என்பது A க்கு சரியான விளக்கம்
5.(இ) இணையம்
6.(இ) 30
7.(ஈ) மேற்கூறிய அனைத்தும்
8.(ஈ) அனைத்தும்
9.(ஈ) (1) – iii (2) – i (3) – iv (4) –ii
10(அ) பொதுக்கீறலிடல்
11.(ஈ) பங்குரிமை ஆணை
12.(ஈ) திட்டமிடுதல்
13.(ஈ) சமநிலை பங்கு சந்தை – கடனீட்டுபத்திரம்
14.(ஆ) தேர்வு / இ) ஆட்சோர்ப்பு
15.(ஈ) பாதுகாப்பு சந்தை
16.(ஈ) திட்டக் கூறு
17.(ஈ) பொறுப்புகள்
18.(ஈ) போக்குவரத்து
19.(ஆ) பரஸ்பர நிதி
20.(இ) கோரப்படாத விண்ணப்பதாரர்கள்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. ஹேஸ்டிங்ஸ் கூற்றுப்படி, பங்குச் சந்தை வரைவிலக்கணம்** ;பங்கு மாற்றகம் என்பது வாங்கியவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி, அனைத்து வகையான பத்திரங்கள், பங்குகளை கையாளும் ஒரு இடமே ஆகும

**22. ஆட்சேர்ப்பின் பொருள்** ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு, பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிச் செயல்முறை, ஆட்சேர்ப்பு எனப்படுகிறது.

**23. சந்தை** வணிகம் நடைபெறும் இடத்தைக் குறிப்பது சந்தையாகும். பொருட்களை வாங்குதல் மற்றும் விசாரணை செய்வதற்கான ஒரு இடமாக சந்தை திகழ்கிறது.

**24. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்** 1) பாதுகாப்பில் உரிமை 2) தகவல் பெறும் உரிமை 3) தேர்ந்தெடுக்கும் உரிமை 4) கேட்கும் உரிமை

**25. உட்புறச் சூழல்** என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும். எடுத்துக்காட்டு : கொள்கைகள் மற்றும் திட்டங்கள், நிறுவன கட்டமைப்பு, ஊழியர்கள், நிதி மற்றும் வளங்கள்

**26. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.** கணக்கியல் வணிகச் சட்டங்கள், உளவியல் புள்ளியியல் பொருளியல் தரவு செயலாக்கம்

**27. அரசுப் பத்திரங்கள் சந்தை** அரசு அல்லது தங்க முனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு ‘அரசு பத்திரங்கள் சந்தை’ என்று பெயர்.

**28. தோற்றுவிப்பாளர்** ஒரு நிறுமத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்து, எவருக்கு தோன்றுகிறதோ, அவரை தோற்றுவிப்பாளர் என்று கூறுகின்றோம்.

**29. தொழில் முனைபவர்களுக்கு, ஆழ்ந்த பகுப்பாய்வு திறன் வேண்டும் ஏனெனில்** உற்பத்தி செய்ய அல்லது விற்பனை செய்ய விரும்பும் பொருளினை பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். உத்தேசித்த பொருளின் சந்தை வாய்ப்பு அதாவது தேவை எப்படி உள்ளது, அந்த பொருளை வெற்றிகரமாக உற்பத்தி செய்ய முடியுமா என்று தீவரமாக ஆய்வில் இறங்கவேண்டும்.

**30.** எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது **இடக்கை பெருவிரல் குறி** இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை **ஒருவர் சான்று கூறல் வேண்டும்.**

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை (ஏதேனும் 3)** 1) அமைப்பு மற்றும் தனி நபர்களின் குறிக்கோள்களை ஒருங்கிணைக்க நிர்வாகத்தால் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இது திறமையான மேலாண்மைக்கு வழிவகுக்கிறது. 2) குறுகிய கால இலக்குகளுடன், நிறுவனத்தின் நீண்டகால இலக்குகளை இணைக்க குறியிலக்கு மேலாண்மை முயற்சி செய்கிறது. 3) சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்த, முயற்சி செய்கிறது. 4) குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டும் அடையச் செய்வதல்ல, திறமையான செயல் திறனையும் அடையச் செய்கிறது. 5) இது இலக்குகளை சீர்படுத்துவதற்கும், மாற்றுவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் நிலையான கவனத்தினை செலுத்துகிறது. இது அனுபவத்தின் அடிப்படையில் அணுகு முறைகளை மாற்றி இலக்கை அடையச் செய்கிறது. 6) இது அனைத்து நிலைகளிலும், இலக்குகளை அடைவதற்கான அமைப்பின் திறனை அதிகரிக்கச் செய்கிறது. 7) குறியிலக்கு மேலாண்மை மூலம், ஊழியர்களுக்கு அதிகபட்ச ஊக்கம் மற்றும் திருப்தி கிடைக்கச் செய்கிறது. 8) இலக்கு அமைக்கும் செயல்பாட்டில், ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது. 9) நோக்கத்தை மாற்ற, அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனைகள் செய்கிறது. 10) நம்பிக்கை, நல்லெண்ணம், மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

**32. துணிகர நிதி நிறுவனம்** துணிகர மூலதன நிதி என்பது, சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும். இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். துணிகர மூலதனம் என்பது, தொழில் நுட்ப திட்டங்களை வணிக மயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது. பல சிறப்புமிக்க நிதி நிறுவனங்கள், துணிகர மூலதன நிதி முலமே உச்சநிலையை அடைந்துள்ளது.

**33. கரடி** எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுகின்ற ஊகவணிகர். இவர் மண்டிவாலா என்றழைக்கப்படும் ஊகவணிகர் இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர். ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது. அதேபோல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

**34. ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள படிநிலைகள்** 1) ஆட்சேர்ப்பு திட்டமிடல் 2) காலிப்பணியிடங்களை தீர்மானித்தல் 3) வளங்களை கண்டறிதல் 4) விளம்பரம் குறித்த தகவலை உருவாக்குதல் 5) பொருத்தமான விளம்பரம் முறையை தேர்ந்தெடுத்தல் 6) தேர்வு செயல்பாட்டிற்கு வழிவகுத்தல் 7) மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடு

**35. வளைதளச் சந்தையிடல்** பண்டகம் மற்றும் சேவைகள் பரிவர்த்தனையில், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் மின்னணு வலைத்தளத்தின் வழியாக மேற்கொள்ளுவதை வலைதளச் சந்தையிடல் என்றழைக்கப்படுகிறது.

**36. செயற்கைப் பற்றாக்குறை** சில சூழ்நிலைகளில் வணிகர்கள், தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை, இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட, தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர். இத்தகைய செயல்முறையே செயற்கைப் பற்றாக்குறை எனப்படுகின்றது.

**37. வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகள் (ஏதேனும் 3)** 1) நிதி அளிப்பவர்கள் 2) சரக்கு விற்பனையாளர்கள் 3) சந்தையிடுகை இடைநிலையர்கள் 4) பொதுமக்கள் 5) வாடிக்கையாளர்கள் 6) போட்டியாளர்கள்

**38. தெளிவான தொழில் முனைவோருக்கு ஆறு உதாரணம் தருக.** 1) அம்பானி 2) ஜாம்செட் டாடா 3) T.V. சுந்தரம் ஐயங்கார் 4) சேஷாத்திரி 5) பிர்லா நாராயண மூர்த்தி 6) அஸிஸ் பிரேம்ஜி

**39. சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக.** 1) நிறும பெயரைத் திருத்த 2) நிறும பங்கு முதலை மாற்றியமைக்க 3) கடனீட்டு பத்திரங்களை மீட்க 4) பங்காதயங்கள் அறிவிக்க 5) ஆண்டு இருப்புநிலைக் குறிப்பை ஒப்புதல் வழங்க 6) இயக்குநர்களை பணியமர்த்த.

**40.** மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால், **ஒரு சிறு ஒட்டுத்தாளை** ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விளக்குக அ) பத்திரங்களின் சந்தை** பங்குகள், கடனுறுதிப் பத்திரங்கள் போன்ற பத்திரங்கள் மூலதனச் சந்தையில் கையாளப்படுவதால், இது பத்திரங்களின் சந்தை என அழைக்கப்படுகிறது.

**ஆ) விலை** பத்திரங்களின் விலை மூலதனச் சந்தையில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. **இ) பங்கேற்பாளர்கள்** மூலதனச் சந்தையில் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதிநிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது. **ஈ) இட அமைவு** மூலதனச் சந்தைக்கான இடம், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதில்லை என்றாலும், பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் வேண்டும். **உ) நிதிசார்ந்த சொத்துக்களின் சந்தை** மூலதனச் சந்தை, நீண்டகால நிதி சார்ந்த சொத்துக்களுக்கான ஒரு மேடையை வழங்குகிறது.

**41.ஆ. விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள்**

1) இது மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது. 2) இது முக்கிய பிரச்சினைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது. 3) இது அதிகாரப் பகிர்வினை எளிமையாக்குகிறது. 4) இது முக்கியமல்லாத தகவலில் இருந்து, முக்கியமான தகவலைப் பிரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும். 5) முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க இது உதவுகிறது. 6) விதிவிலக்கு மேலாண்மை முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது. இது குறிக்கோள் செயல்திறன் மதிப்பீட்டில் பயனுள்ளதாக உள்ளது.

| **42.அ.** பங்கு பரிவர்த்தனை | பண்டமாற்று பரிவர்த்தனை |
|---|---|
| பங்குச் சந்தை என்பது, தொழில்துறை மற்றும் நிதிப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை. | ஒரு பண்டமாற்ற பரிமாற்றம் என்பது, பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில் பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும். |
| சந்தைப்படுத்தலை எளிதாக்கிறது | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக்காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைத்தன்மை ஏற்படுத்துகிறது |
| பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குகிறது | ஆபத்து குறைப்பு மூலம், பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுகிறது |
| முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், நிறுவனங்களின் வியாபாரிகள் மற்றும் ஊகவணிகர்கள் |
| ரொக்கம், உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள் |
| இதில், பங்குகள், பத்திரங்கள், தொழில்துறை பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றது | இதில், அதிகளவு வர்த்தகம், விலை நிச்சயமற்ற மற்றும் கட்டுபாடற்ற பொருட்கள் சந்தைப் படுத்தப்படுகின்றது |
| ஒரு பரந்த, தயாராக, நீர்மை மற்றும் தொடர்ச்சியான பத்திரங்கள் விற்பனையை உற்திப்படுத்துகின்றன | விலை இடர்பாட்டின் ஈர்ப்பு உத்தேசத்தை உறுதி செய்கிறது |
| பத்திரங்கள் முழுமையாக தரநிலையாக்கப்படுவதால், இவை எளிமைப்படுத்துப் படுகின்றன | எதிர்கால ஒப்பந்தத்தை எளிதாக்குவதற்கு தரநிலை வகுப்புகளுக்கு நியமங்கள் இருக்க வேண்டும். |
| விற்பனையாளர் ஏற்றுக் கொள்ளப்பட்ட பத்திரங்களை வழங்குவதற்கு ஒருமுனைப்படுத்துதல் எளிமையான ஒன்றாகும் | விற்பனையாளர் தரமான அல்லது பிறர் வழங்கக்கூடிய பொருட்கள் வழங்குவதில் ஒருமுனைப்படுத்துதல் கடினமான ஒன்றாகும் |
| முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை ஒருமுனை மேற்கோள் மட்டுமே சாத்தியமாகும் | எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பலமுனை மேற்கோள் சாத்தியமாகும் |

**42.ஆ. பயிற்சியினால் ஊழியர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்** 1) பணியாளர்களின் தனித்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துகிறது.2) குறுகிய காலத்தில் அவர்கள் பணி உயர்வு மற்றும் பண மேம்பாட்டிற்கு உதவுகிறது. 3) தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. 4) தொழிலாளரின் மனத்திண்மையை, ஒழுங்குணர்வு தன்மையை மேம்படுத்துகிறது 5) அதிக ஊதியம் மற்றும் வெகுமதிகளுக்கு வழி கோலுகிறது 6) பயிற்சி பணியாளர்களிடையே, பணி பற்றிய நல்ல மனப்பாங்கினையும், நம்பகத் தன்மையையும் ஏற்படுத்துகிறது. 7) ஆபத்தான பணிகளில் பணியாளர்களுக்கு பாதுகாப்பான நடைமுறைகளை உற்றுநோக்க வகை செய்கிறது.

**43.அ. தனியிடை சந்தை** என்பது உண்மையில் ஒரு சந்தையை அல்ல. இது போட்டியாளர்களை அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட வகுப்பு / பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது. இது ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய மீனாக இருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய குளத்தில் ஒரு பெரிய மீனாக இருப்பது போல ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்யும் சந்தையாக செயல்படுகிறது. உதாரணமாக அனைத்து தொலைக்காட்சி சேனல்களிலும் சிறப்பாக ஸ்டார்ஸ்போர்ட்ஸ் இஎஸ்பிஎன் ஸ்டார் கிரிக்கெட் போன்ற விளையாட்டு சேனல்கள் வெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு மட்டும் உருவானவை. இது விளையாட்டில் ஆர்வம் நிறைந்த வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்கிறது.

**43ஆ. உலகமயமாக்கலின் தாக்கங்கள்**

1) குறைந்த இயக்கம் செலவுகளின் அடக்கம் மற்றும் புதிய மூல பொருட்கள் மற்றும் கூடுதல் சந்தை மூலம், பெரிய நிறுவனங்கள் போட்டி திறனை பெறுகின்றன. 2) பன்னாட்டு நிறுவனங்கள் பொருட்களை தயாரிக்கவும், வாங்கவும் மற்றும் பொருட்களை விற்பனை செய்யவும் முடிகின்றது.
3) உலகமயமாக்கல், நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக (ஏற்றத்துடன்) பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம். 4) வெளிநாட்டு நிறுவனங்களின் வருகை, உள்ளபடி பொருளாதார வளர்ச்சியையும் மற்றும் வேலை வாய்ப்பையும் உருவாக்கி வழி கோலலாம். 5) உலகமயமாக்கல் என்பது, தொழில் நுட்ப முன்னேற்றம், உயர் உற்பத்தி நுட்பங்கள் மற்றும் தடையற்ற தொழில் விரிவாக்கம் போன்ற பல நன்மைகளை நல்கிட வழி வகுத்தது.

**44.அ. நுகர்வோரின் உரிமைகள் ஏதேனும் ஐந்து**

**1) உடல்நலம் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை** சில தயாரிப்புப் பொருட்கள் நுகர்வோரின் உடல் நலம், சொத்துக்கள் மற்றும் வாழ்வு முறையில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கலாம். அத்தயாரிப்புகள் நுகர்வோரின் நலனுக்கு தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கலாம். உதாரணம் : உணவு சேர்க்கைகள், நிறமிகள், உணவுப்பாதுகாப்பு இரசாயனங்கள் ஆகியவை ஆகும். உடல்நலக் கோளாறுகள் மற்றும் ஆரோக்கிய அபாயங்கள் எழும் வாய்ப்புகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் அல்லது முற்றிலும் குறைக்கப்பட வேண்டும். உணவுகள் மற்றும் மருந்துகள் நுகர்வோரின் உயிரைக் காப்பாற்றுவதாகவும் உயிருக்கு பாதுகாப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும். **2) தகவல் பெறும் உரிமை** பொருட்களை வாங்கும்பொழுது, நுகர்வோர் அப்பொருட்களைப் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் கேட்டுப் பெற வேண்டும். விளம்பரம் மற்றும் பெயரிடல் செயல் மூலம் பொருட்களைப் பற்றிய விவரம் அதன் கட்டுமம் மீது தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இதன் உட்பொருள் என்னவென்றால் பொருட்களை உற்பத்தி செய்பவரும், விநியோகிப்பவரும், அப்பொருட்களைப் பற்றிய தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். **3) தேர்ந்தெடுக்கும் உரிமை** நவீன சந்தையியலின் தத்துவம் மற்றும் தலையாய நோக்கம் என்பது, நுகர்வோரை திருப்தி செய்வது என்பதாகும். நுகர்வோரை உச்சபட்ச அளவில் திருப்திபடுத்துவதன் மூலம், ஒரு அறிவார்ந்த வியாபாரி அல்லது உற்பத்தியாளர் தனது இலாபத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார். “தேர்வு” என்பது பரந்த வழிகளில் தரம், வியாபாரக் குறியீடு, நியாயமான விலை போன்றவற்றின் அடிப்படையில் பொருட்களை தேர்ந்தெடுப்பதாகும்.

**4) செவிமடுக்கும் உரிமை** நுகர்வோர் தனது அதிருப்தி மற்றும் கருத்து வேறுபாடுகளை முழுமனதுடன் வெளிப்படுத்துவதுடன் மற்றும் பதிவு செய்ய வேண்டும். வணிக நிறுவனங்கள் நுகர்வோரின் புகார்கள் மற்றும் குறைகளை திறந்த மனதுடனும் கருணை மனப்பான்மையுடனும் செவி மடுக்க வேண்டும். அனைத்து வணிக நிறுவனங்களும் நுகர்வோரின் குறைகளை கண்டறிய, தனியான துறை அல்லது பகுதி அல்லது பிரிவை ஏற்படுத்த வேண்டும். **5) நிவாரணம் காணும் உரிமை** பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும். குறைதீர்ப்பு செயலினால், நுகர்வோர் நம்பிக்கை அதிகரிக்கும் மற்றும் வாங்குபவர்களுக்கும் நியாயம் கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்மையான கூற்றுகளுக்கு நியாயமான மற்றும் உறுதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். **6) வாழ்க்கைத் தர உரிமை** வாழ்வின் தரம் என்பது, சமுதாயத்தில் மக்கள் நலமாக இருப்பதைக் குறிக்கும் மற்றும் மக்கள் வாழும் சூழலின் தனிப்பட்ட மற்றும் நல்வாழ்வைக் குறிக்கிறது. உற்பத்தியாளர்களால் வெளியேற்றப்படும் கழிவுகள் மற்றும் கழிவு நீரினால், சுற்றுப்புறச் சூழல் மற்றும் மனிதர்களை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். **7) அடிப்படைதேவைகளுக்கான உரிமை** ஒவ்வொரு நுகர்வோருக்கும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் சுத்தமான நீர் மற்றும் ஆரோக்கியமான சூழலுக்கான அடிப்படைகளை பெறுவதற்கு உரிமை உண்டு.

**8) நுகர்வோர் பாதுகாப்பு உரிமை** நுகர்வோர் தனது உரிமைகள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு அவரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவரின் குறைகளுக்கு தீர்வு காண ஊடகத்தின் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும். நுகர்வோர் தனது வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கு அபாயகரமான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு எதிராக பாதுகாத்துக்கொள்ள உரிமை உண்டு.

தரக்குறைவான கூறுகளுடன் உற்பத்தி செய்யப்படும் அல்லது பாதுகாப்பு விதிமுறைகளுக்கு இணங்காத நுண்ணலைக் கருவிகளைப் பயன்படுத்துவதால் அதைப் பயன்படுத்தும் பயனாளிகள் கடுமையான உடல் ரீதியான தீங்கினை அவர்களுக்கு ஏற்படுத்தலாம்.

நுகர்வோர் தனது பட்டறிவுடன் ஐ.எஸ்.ஐ குறியீடு உள்ள மின்சார உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். இதனால் உற்பத்தியாளர்கள் தரமான பொருட்களை மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

**9) நுகர்வோர் கல்வி உரிமை** நுகர்வோர் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய உரிமையைப் பற்றி அறிந்தவராக இருக்கிறார். நுகர்வோர் தன்னுடைய பொருட்கள் மீதான எதிர்பார்ப்பில் குறைபாடுகள் இருந்தால் தனக்கான உரிமையைப் பயன்படுத்தி அதற்கான நிவாரணத்தைப் பெறுவதில் முனைப்பாக இருக்க வேண்டும். பல நுகர்வோர் அமைப்புகள் மற்றும் சில சிறப்பு பெற்ற தொழில்கள் இந்த வகையில் நுகர்வோர் கல்வி வழங்குதல் சார்பாக பங்கெடுக்கின்றன.

**44.ஆ. நிதிச்சந்தையின் பங்கினை விவாதிக்கவும்.**

**அ. சேமிப்பை பெருக்குதல்**

சேமிப்பாளர்கள் (அ) தனிநபர்கள், வணிக நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், மற்றும் அரசு போன்ற உபரி அலகுகளிடமிருந்து நிதிகளை பெறுவதன் மூலம் நிதிச்சந்தை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. **ஆ. முதலீடுகள்** நிதி முதலீடுகளை வசூலிப்பதிலும் அவற்றை தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதிலும் நிதிச்சந்தை முக்கியப்பங்கு வகிக்கிறது. **இ. தேசிய வளர்ச்சி** நிதிப் பற்றாக்குறை உள்ள நிறுவனங்களுக்கு உபரி நிதிகள் தடங்கலின்றி நடமாட்டம் செய்ய உறுதி செய்வதன் மூலம் ஒரு தேசத்தின் வளர்ச்சியில் நிதிச்சந்தை பங்களிப்பை வழங்குகிறது. நிதி ஆக்க பூர்வமான நோக்கில் பயன்படுத்த வழிவகை செய்கிறது. இது ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. **ஈ. தொழில் முனைவோர் வளர்ச்சி** தேவையான நிதி வளங்கள் தொழில்முனைவோர்களுக்கு கிடைக்க பெறுவதன் மூலம் அதன் மேம்பாட்டிற்கு நிதிச்சந்தை பங்களிக்கிறது. **உ. தொழிற்துறை மேம்பாடு**

நிதிச்சந்தையின் பல்வேறு கூறுகள் ஒரு நாட்டின் தொழிற்துறையின் துரிதவளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி புரிகிறது. இதன்மூலம் சமுதாயத்தின் வாழ்க்கைதரம் மற்றும் நல்வாழ்வை உயர்த்துகிறது.

**45.அ. வகுப்பு கூட்டம்** ஒரு குறிப்பிட்ட வகையான பங்குகள் அல்லது கூட்டங்கள், குறிப்பிட்ட வகையான கடனீட்டுப்பத்திரங்களும், கூட்டப்படும் கூட்டம், வகுப்பு கூட்டம் ஆகும்.

**கடனீந்தோர் கூட்டம்** நிறுமக் கூட்டங்களை போல இது ஒரு நிறும கூட்டம் அல்ல. இருப்பினும், இது ஒரு புதிய கடன் கொள்கையை அறிமுகம் செய்யும் போது அல்லது கடனீந்தோர்கள் தொடர்பான சில வழக்குகளை பேசி முடிவு எடுக்கவும், கடனீந்தோர்களுடன் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் இவ்வகை கூட்டங்கள் கூட்டப்படுகிறது

**45ஆ. மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்கள்** ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் ஒப்புக்கொள்வதாக கருதப்படுகிறது. அதில் குறிப்பிட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது. நியாமான காலத்திற்குள் முதிர்வுக்கு முன்பாக ஏற்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அதன் முதிர்வு தேதிக்கு முன்பே மாற்றப்பட்டதாக கொள்ளப்படுகிறது. மாற்றுமுறை ஆவணம் காணாமல் போனாலும் முறைப்படி முத்திரையிடப்பட்டுவதாக கருதப்படுகிறது. இதனை வைத்திருப்பவர் முறைப்படி உடமை பெற்றவராகக் கருதப்படுகிறார் மாற்றுமுறை ஆவணத்தில் மேலேழுதப்பட்டது என குறிப்பிட வேண்டும்.

| 46.அ. அடிப்படை | தொழில் முனைபவர் | அகத் தொழில் முனைபவர் |
|---|---|---|
| சிந்தனை | இவர் ஒரு தடையற்ற சிந்தனைவாதி | இவர் தன்னிச்சையான சிந்தனைவாதி |
| சார்பு நிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்து இருப்பவர் |
| நிதி திரட்டல் | தன் சொந்த முயற்சியில் தொழிலுக்கான நிதியை திரட்ட வேண்டும் | நிதி திரட்டும் பொறுப்பு இல்லை. ஆனால், திரட்டிய நிதியைகையாளும் பொறுப்பு உள்ளது |
| வெகுமதி | தங்களின் இடர் ஏற்பு பணிக்காக இலாபம் என்ற வெகுமதியை பெறுகின்றனர் | இலாபத்தில் பங்கு இல்லை. ஆனால், திரட்டிய நிதியை கையாளும் பொறுப்பு உள்ளது |
| இடர் ஏற்றல் | தான் ஆரம்பித்த தொழிலின் இடரை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது | இவர், தொழில் தொடர்பாக எழும் இடர்பாட்டில் பங்கு பெறுவதில்லை |
| தகுநிலை | இவர் உரிமையாளர் என்ற தகுநிலை படைத்தவர் | இவர் உரிமையாளர் அல்ல. ஆனால், ஊழியர் தான் மேற்கொண்ட செயலுக்கு, தன்னுடைய மேல் அதிகாரிக்கு பதில் சொல்ல கடைமையுடையவர் |
| செயல்பாடு | தான் தொடங்கிய தொழிலின் புறத்தில் நின்று பெரும்பாலும் செயல்படும் நபர் | முழு நிறுமத்திற்கு உட்பட்டு இயங்கும் நபர் |

**46.ஆ. பண்டங்கள் மற்றும் சேவைகள் தவிர சந்தையில் சந்தை இடப்படும் ஐந்து பொருட்கள்** **1. அனுபவங்கள்** பண்டங்கள் மற்றும் பணிகளை முன்கூட்டி அனுபவம் பெற்ற ஒரு குழு மூலம் ஒரு நிறுவனம் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்குகிறது உதாரணமாக வர்த்தக பொருட்காட்சி சென்று வருதல் **2. நிகழ்வுகள்** காலம் மற்றும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வகை சந்தை மேம்படுத்தப்படுகிறது அதாவது பொருட்காட்சி கலைநிகழ்ச்சிகள் ஆகியன ஆசிய அளவிலான விளையாட்டுப்போட்டிகள் மற்றும் உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் போன்றவை இதில் அடங்கும் **3. நபர்கள்** இன்றைய தொழிலில் பிரபலங்கள் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்வது ஒரு வாடிக்கையாக உள்ளது **4. இடம்** புதிய குடியிருப்புகள் தலைமையகம் தொழிற்சாலை பொழுதுபோக்கு அம்சங்கள் சுற்றுலா வசதி வணிக வாய்ப்புகள் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்பு அம்சங்கள் பற்றி எடுத்துரைத்து அதனடிப்படையில்

பண்டங்கள் மற்றும் பணிகள் குறித்து தூண்டுவது **5. உடமைகள்** கண்ணுக்குப் புலப்படாத உரிமை மாற்றத்தை இதனடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது அதாவது நிலம் மனை மற்றும் கட்டிடம் அல்லது நிதி சார்ந்த உடைமைகளை ஆகிய பங்கு மற்றும் பத்திரங்கள் போன்றவை **6. அமைப்பு** ஊரமைப்பு பொதுமக்கள் மத்தியில் தனக்கென நிரந்தரமான ஒரு இடத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக சில செயல்பாடுகளை மேற்கொண்டு அதன் மூலம் தனது பொருட்களை சந்தையிடுகை செய்கிறது **7. தகவல்** இன்று தகவல் சந்தைப்படுத்த கூடிய மிக மதிப்பு வாய்ந்த ஒரு பொருளாக கருதப்படுகிறது **8. கருத்துக்கள்** ஒவ்வொரு சந்தையில் தனக்கென ஒரு கருத்துக்களை உள்ளடக்கி உள்ளது சமூக நோக்குடைய சந்தையிடுகை அவர்கள் எப்போதும் கருத்துக்கள் மேம்படுவதுடன் இருந்து வருகின்றனர்

**47.அ. திரு ரவி என்பவர் ஒரு நிறுவனத்தின் இயக்குனராக பணியமர்தப்படுகிறார் அவர் தனிப்பட்ட முறையில் மூன்றாம் நபருக்கு பொறுப்பாவார் ஏனெனில்** இயக்குனர்கள் தங்களின் சட்டப்பூர்வமான கடமைகளில் இருந்து தவறும் போது மூன்றாம் நபருக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாளர் ஆகிறார்கள் காரணம் 1. தகவல் அறிக்கையில் உள்ள தவறான செய்திகள் 2. முறையற்ற பங்கு ஒதுக்கீடு 3 குறிப்பிட்ட குறைந்தபட்ச பங்களிப்பு செய்யாதவர்கள் செலுத்திய விண்ணப்ப பணத்தை திரும்ப செலுத்தாத போது 4. பங்குமாற்று சந்தையில் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களைப் ஒதுக்கீடு செய்யப்படாதவர்கள் செலுத்திய உதவித் தொகையை திரும்ப செலுத்தாத சூழ்நிலையில் மூன்றாம் நபருக்காக பொறுப்பாளாறாகிறார்.

**47.ஆ. திருமதி. சிந்தியா என்ற தொழில் முனைவோர் சந்திக்கும் சவால்கள் (ஏதேனும் 5)**

**1) நிதிப்பிரச்சனை** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, தங்களின் தொழில் வினையில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை சமாளிப்பது மிகப் பெரிய சவாலாக விளங்குகிறது. தங்களின் பெயரில் சொத்துக்கள் இல்லாத மகளிர் உரிமையாளர்கள், பிணைக்கடன் பெறுவதிலும், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற, பெரும் இன்னல்களுக்கு உட்படுகிறார்கள். இதனால், தாங்கள் மேற்கொண்டுள்ள வினைகளை, போதிய அளவில் விரிவாக்கம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள் **2) இயக்கத்தடை** மகளிர் தொழில் முனைவோர்கள், நமது நாட்டு கலாச்சாரப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய சூழலில், வீட்டு பொறுப்புகளையும் சுமக்க வேண்டியுள்ளது. அதன் காரணமாக, பொருளை கொள்முதல் செய்வது, வங்கியில் கடன் பெறுவது, விற்பனை பொருட்டும், தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும், ஊழியர்களை மேற்பார்வை செய்யவும், பலதரப்பட்ட ஒப்புதல்களை, அரசு மற்றும் பிற ஒழுங்காற்று நிறுமங்களிடமிருந்து பெற்றிடவும் அவர்கள், பிறரிடம் இந்த பயண வேலைகளை ஒப்படைக்க வேண்டியுள்ளது. **3) கல்வியறிவு இன்மை** ஏட்டறிவு இல்லா அல்லது குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள், வியாபாரம் அல்லது தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதாக புரிந்து கொள்ள முடியாதவராக உள்ளனர். **4) ஆதரவு இன்மை** மகளிர் தொழில் முனைவோர், செம்மையாக தன் வினையை செயல்படுத்த, பலதரப்பட்ட மக்களின் கனிவு, பரிவு மற்றும் ஆதரவு இவைகள் தேவைப்படுகின்றன. தொழிலில் நெருக்கடிகள் வரும்போது, மேற்கூறிய நபர்கள் ஆதரவாக தோள் கொடுக்க முன்வர வேண்டும். ஆனால், ஆண் ஆதிக்க மனப்பான்மை கொண்ட நபர்களின் நடத்தை மற்றும் வார்த்தை, வன்முறைகள், மகளிரின் தொழில் துணிவை மிகவும் பாதிக்கிறது. **5) கடும்போட்டி** தாராளமயமான போட்டி உலகில், மகளிர் தொழில் முனைவோர்கள், பெரிய நடுத்தர தொழில்களிடமிருந்து கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர். போட்டியை வலுவாக எதிர்கொள்ள, விளம்பரம் மற்றும் விற்பனை பெருக்க யுக்திகளை கையாள வேண்டியுள்ள சூழ்நிலையில், மகளிர் தொழில் முனைவோர்கள் ஈடுகொடுக்க முடியாமல் திணறுகின்றனர். **6) உணர்ச்சி வயப்படல்** மகளிராக இருப்பவர்கள், இயற்கையாகவே உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள். உணர்ச்சி பொங்கி எழும்போது, கோபப்படக் கூடியவர்கள். இப்படிப்பட்ட மனநிலை, தொழிலில் சிக்கல் அல்லது சவால்கள் எழும்போது அமைதியாக, நிதானமாக, பொறுமையாக முடிவெடுக்க அவர்களை விடுவதில்லை. இத்தகைய சூழல்கள், மகளிர் தொழில் முனைவரின் செயல்பாட்டை பெரிதும் பாதிக்கின்றன. **7) போதிய விவரமின்மை** மகளிர் தொழில் முனைவோர்கள், தங்களின் குறைந்த படிப்புத் தகுதி காரணமாகவோ, அலட்சியம் காரணமாகவோ அல்லது வீட்டு வேலை சுமையின் காரணமாகவோ, தங்களால் துவக்கப்படும் தொழிலைச் சுற்றி என்ன நடக்கிறது? என்னென்ன சலுகைகள் அரசு நல்குகிறது? அரசு சாரா அமைப்புகளின் ஆதரவு என்ன? என்பது போன்ற தகவல்களை உள்வாங்க இயலாதவராக இருக்கின்றனர். **8) சார்ந்து வாழும் கலாச்சாரம்** பல சமயங்களில், மகளிர் தன் வாழ்நாள் முழுவதும், பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக திருமணத்திற்கு முன்பு பெற்றோர்கள், திருமணத்திற்கு பின்பு கணவன் வயதான காலத்தில் பிள்ளைகள் என பிறரை மையமாக வைத்தே மகளிர் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், அவர்களாக தன்னிச்சையாக தடையின்றி எந்த முடிவையும் அவர்கள் எடுக்கவிரும்புவது இல்லை. எல்லா முடிவுகளுக்கும், பிறரின் அனுமதி வேண்டி, காத்து கிடக்கின்றனர். இப்படிப்பட்ட கலாச்சார தடை, மகளிர் தொழில் முனைவோர்களை தன்னுடைய விருப்பப்படி தொழிலை துவங்கி, அதனை நிர்வகிக்க அனுமதிப்பதில்லை.